தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] திபி. 2017 கடகம் (1.9.986) 65 காசுகள் [இதழ் எண்: 74] [பகுதி 9.21

உ.த.மு.க. சார்பில் டிசம்பர் 27, 28-இல் சென்னையில் நடைபெறவிருக்கும் வரலாற்றுச் சிறப்புடைய மிகப்பெரும் நிகழ்ச்சி!

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

தமிழகம் முழுவதுமே திரண்டு வருக!

தமிழின நலத்தில் அக்கறை கொண்ட அனைத்துத் தலைவர்களும், ஆர்வலர்களும் முன்னதாக இசைவு பெற்றுக் கருத்தறிவிக்கலாம்!

இரண்டாம் நாள் கருத்தரங்கின் முடிவில் தமிழக முன்னேற்றத்தின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் ஒரே தீர்மானம் நிறைவேற்றப் பெறும்!

உ.த.மு.க. செயற்குழு முடிவு!

சென்னை-10:

உ. த. மு. க.-வின் செயல் மேனிலைக் குழு, அண்மையில் தஞ்சையில் கூடி, வரும் டிசப்பர் மாதம் 27, 28 - ஆம் பக்கல்களில், சென்னையில் "**தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு**" என்னும் பெயரில், மிகப்பெரிய அளவில் ஒரு கருத்தரங்கை நடத்துவதெனத் தீர்மானித்தது.

கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளர், பேச்சாளர் என்னும் அளவில், எவரையுமே அழைக்காமல், தமிழின எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட அனைவருமே கூடி, அதன் எதிர்கால உறுதிப்பாட்டிற்கென ஒரு தீர்மானமாக இறுதி முடிவு ஒன்றை, உறுதி செய்வதென்றும், அதையே கழகம் எதிர்காலச் செயல் நடவடிக்கையாக மேற்கொள்வதென்றும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செயல் மேனிலைக் குழு தீர்மானித்தது.

குறிப்பிடப் பெற்ற இரண்டு நாள்களிலும், சென்னை நடுவிடத்தில், வரலாற்றுச் சிறப்புடைய இக் கருத்தரங்கம் நடக்கும்.

இக் கருத்தரங்கில் அனைவரும் பங்கு கொள்ளலாம். அனைவருமே முன்னிசைவு பெற்றுக்கொண்டு பேசலாம். இறுதியில் பார்வையாளர்கள் நடுவில், ஓர் '**ஒப்போலைப் பதிவு**' நடைபெறும். அதன் முடிவு இரண்டாம் நாள் கருத்தரங்கின் முடிவில் **கருத்தரங்கின் ஒரே தீர்மானமாக** நிறைவேற்றப் பெறும்.

கருத்தரங்கில் தம் முடிவான கருத்துகளை எடுத்துக்கூற விரும்புபவர்கள் முன்னமேயே, முதல்வர்க்கு எழுதித் தம் பெயர்களைப் 'பதிவு' செய்துகொள்ள வேண்டுகிறோம்.

கருத்தரங்குக்கு ஏராளமான பொருளுதவி தேவை. அதைத் தமிழின நலத்தில் நாட்டங் கொண்ட செல்வர்கள், பொதுநல உணர்வுடையவர்கள், ஆர்வலர்கள். அன்பர்கள் அனைவரும் உ. த. மு. க.-வின் முதல்வர் பெருஞ்சித்திரனார் அவர்களின் பெயருக்கு நன்கொடையாகப் பணவிடை, வரைவோலை, காசோலை வழியாக அனுப்பி வைக்கலாம். நன்கொடைப் பற்றுமுறி எதுவும் தேவையில்லை.

"தமிழ்நில" த்தில் நன்கொடையாளர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

அன்பர்கள் இன்றே நன்கொடை அனுப்பத் தொடங்குங்கள்.

பிற விளக்கங்கள் பின்னர் வரும்!

கழக முதல்வர், உ.த.மு.க.,
மே/பா. தென்மொழி, சென்னை-5.

மலேசியாவில் பாவலரேறு அவர்களை வாழ்த்துரைத்து வரவேற்ற வயங்கு தமிழ் நெஞ்சங்கள்!

கோலகுபு பாரு வருகை மேற்கொண்டபோது
வழங்கப்பெற்ற

வரவேற்பு வாழ்த்து வ ண் ண ம் !

தூய்மைத் தமிழ்காத்துத் தொன்மை நலம்பேணி
வாய்மைத் திருவோங்கும் வாழ்வினரே! - தாய்மைப்
பெருஞ்சித் திரப்பேறே பீடுதமிழ் இன்பம்
அருந்தத் தருக,எமை ஆண்டு.

பாவேந்த ருக்குப்பின் பாட்டுலகில் யாவருக்கும்
கோவேந்தன் நீயன்றோ! கொஞ்சுதமிழ் - நாவேந்தே !
வா,வேந்தே! எந்தமிழர் வாழ்வில் நலம் எய்திடவே
தா,வேந்தே! நல்லுரைகள் தாம்.

ஊர்பாடி னூர்;செல்வர் உள்ளம் களிக்க,அவர்
பேர்பாடி னூர்;காதல் சீர்பாடித் - தார்வேந்தர்
போர்பாடி னூர்;மற்றும் பூந்தமிழர் மேன்மைக்கே
ஆர்பாடி னூர்;உன்போல்? ஆம்.

ஆரியத்தைச் செந்தமிழுக்(கு) அன்னையெனக்
[காட்டுகின்ற
பூரியர்தம் பொய்யுரைகள் போய்ஒழிய - மாரியெனப்
பாமுழக்கம் செய்கின்ற பைந்தமிழப் பாவலனே
வா,முழக்கம் செய்தெம்மை வாழ்த்து.

பாவலர்க்கு ஏறு,நீ; பாவாணர் கண்டுரைத்த
நாவலர்க்கு நாவலன்,நீ; நற்றமிழ்க்குக் - காவலன்,நீ!
ஆரியத்தின் ஆர்ப்பரிப்பை ஆங்கடக்க வந்துற்ற
பேரியக்கம் ஆமுன்றன் பேர்.

மூந்தைப் புகழ்மிக்க முன்நின்(று) உழைத்ததமிழ்த்
தந்தை மறைமலையார் தம்வழியில் - நொந்தத்
தமிழர் நலம்பேணித் தண்டமிழர் ஆட்சிக்(கு)
அமைந்தாய் அரணாய்,நீ அன்று.

நூறு சிரியத்துன் நுண்புலமைச் சீரறிந்து
பேரா சிரியப் பெருமையரும் - ஏறுவான்
பாவலருள் என்றிங்குப் பாடிப் பராவுதமிழ்க்
காவற் களிறுனாய் காண்.

பன்மொழி ஆய்ந்ததமிழ்ப் பாவாணர் தம்படையில்
இன்மொழி காக்க எழுந்து, புகழ்த் - தென்மொழி
கண்டபெருஞ் சித்திரக் கண்ணியனே! என்றென்றும்
நின்றுன் புகழ்நிலைக்கும் நீடு.

எண்ணம் செயல்மூச் செனும்இவை என்றென்றும்
வண்ணத் தமிழ்க்கென்றே வாழ்வமைத்தாய்!-உண்மை
தமிழன்பால் வாழ்த்துகின்றோம் தண்டமிழ்போல்
[என்றும்
கமழ்ந்திருக்கும் நின்புகழும் காண்.

—தமிழ் மாணவர் பேரவை,
கோலகுபு பாரு.

பாடல்: பாவலர். பொன்முடி.
31—5—1986.

தமிழ் எங்கள் உயிர் !

தாய்நாட்டுத் திலகமே வருக !
தமிழ்மொழியையும் இனத்தையும்
உயிரென மதிக்கும்- (தாய்)

அன்னைத் தமிழுக்கு அயராது உழைக்கும்
அழகான தமிழை உலகிற்கு உணர்த்தும்- (தாய்)

மொழியையும் இனத்தையும் உயிரென மதித்து
மூடக் கொள்கைகளை மக்களுக்கு உணர்த்தும்- (தாய்)

உலகத்தில் வாழும் தமிழருக்காக,
உழைக்கும் எங்கள் தலைவா !
உன்னை உலகம் போற்றும் தமிழுக்காக !
உயிரையே கொடுக்கும் தலைவா ! (தாய்)

கண்மூடித் தூங்கும் தமிழரை எழுப்பக்
காலமும் நேரமும் வந்தனவே !
கண்ணான தமிழை உயிரென மதிக்கக்
காலம் நெருங்கியது இப்போதே ! (தாய்)

— முத்தையா, நெகரி செம்பிலான்.

4-6-1986 ஆம் நாள், பிறைநகரில் வழக்கறிஞர் திருமிகு. வி. முத்துசாமி, ஏ. எம். என் அவர்கள் தலைமையில், பிறைவாழ் தமிழ்ப் பெருமக்கள் சார்பில் வழங்கப்பட்ட சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சியில் படித்து வழங்கிய,

வரவேற்பு வாழ்த்து மடல் !

ஆசிரியர்க் காசிரியர் பேரா சிரியர்,
அரியதமிழ் மொழிக்குலத்தின் தலைமை ஆசான்,
பேசரிய தமிழ்வேர்ச்சொல் பிறப்பாய் வாலே,
பெருந்தமிழின் பீடுரைத்த தேவ நேயர்
பாசறையின் தமிழ்மறவர் அணியில் தோன்றிப்
பாடாற்றும் அன்புருவே! அறத்தின் சால்பே !
வீசுமலர்த் தமிழ்ப்பொதிகைத் தென்றல் காற்றே !
விரிதமிழர் இனமுழக்கே வருக ! வாழ்க !

பாவார்க்கும் பெரும்புலமை வாய்ந்த வல்லோய் !
பைந்தமிழ்க்குப் பாடாற்றும் இனிய நல்லோய் !
நாவார்க்கும் பெருவன்மை அமைதலுற்றோய் !
நற்றமிழின் நெறிபேணும் அருமை பெற்றோய் !
மூவாத செந்தமிழாய் ஞாலம் போந்த
முடியார்த்த மூத்தமிழ்க்கு மூச்சுயிர்க்கும்
பாவாணர் மறுபதிப்பே ! பயனூர் வித்தே !
பைந்தமிழே ! சித்திரனே ! வருக ! வாழ்க !

அன்பேந்தி, அறமேந்தி, அடக்க மேர்தி,
அமைந்தொளிரும்தமிழ்ப்பண்பின் நலங்களேந்தி,
பண்பேந்திப், பரிவேந்திப், பாச மேந்திப்
பாவாணர் தனித்தமிழின் கொள்கை யேந்தித்
தென்பேந்திப் பாமழைதான் பொழிந்து தேய்ந்த
தென்புலத்தை முறுக்கேற்றி மெய்ம்மை சாற்றி
இன்பாடும் தமிழ்க்குயிலே! தமிழர் தூதாய்
இனிப்பெடுக்கும் நின்வருகை வெல்க ! வாழ்க !

ஆறுகோடித் தமிழர்களால் பயன்தான் யாதாம்,
அலைகடலைத் தாண்டிவாழ் தமிழர்க் கிந்நாள் ?
நூறுகோடித் தமிழர்களே வாழ்ந்தா லென்ன ?
நுண்ணியதாம் அவர்நாடி துடியா மண்ணே !
வீறுபடத் தமிழ்புறநா னூறு சூட
வினைசுழற்றும் தமிழ்மகனே! வரியின் போத்தே !
ஆறுகோடித் தமிழர்க்கும் உணர்வு தோற்றும்
அடல்சார்ந்த சித்திரனே! வருக, வாழ்த்து !

உணர்வலைகள் செல்லரித்து மழுக்க முற்றே
உள்ளுணர்வு கலக்குற்றே உணர்ச்சி யற்று
மனநிலையும் தடுமாறி மதியும் கெட்டு
மாண்போடு பண்புநலம் நெறிகள் பட்டு
நினைவலைகள் ஓய்வுற்றே அமைதி கெட்டு
நெஞ்சத்தின் துடிப்பிழந்து சொரணை யற்றோர்
மனவலைகள் மீதூர வினைப்பா டாற்றும்
மாணிக்கப் பாவலனே வருக ! வாழ்க !

ஏறனைய பெருந்தகையே ! இனத்தில் சூழும்
இருளொடுக்கும் எழுகதிரே ! அறிவின் தூதே !
ஊறொடுக்கும் பகைப்புலத்தான் இடுப்பொ டிக்க
உரையிட்ட குறுவாளே ! ஊழித் தீயே !
வீறெடுத்த வெங்களிறே ! வினைசால் வித்தே !
வெங்கொடுமை தகர்த்தெரியும் அரிமாப்போத்தே!
சீரெடுத்த தமிழர்க்காய்த் தொண்டு டற்றும்
தென்மொழியின் ஆசிரியீர் ! வருக ! வாழ்க !

அன்புடன்,
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
வரவேற்புக் குழுவினர், பிறைநகர்,

பாடல் ஆக்கம்: பாவலர். பெ. கோ. மலையரசன்.

உலகத் தமிழின விடுதலைப் பாவலர்
• பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்
மலேசிய வருகை நினைவாக 31-5-1986 காரி மாலை
செலயாங்பாரு கோலாலம்பூர் செர்பகுணமண்டபத்தில்
மலேசியப் பாவலர் வெ. தேசகுரு அவர்களால்
பாடப்பெற்ற பாடல்.

தமிழ் வளர்க்க வேண்டுமையா !

தணியாத உணர்வெல்லாம் தமிழர் வாழ்வில்
தாழ்ச்சியுற்ற நிலைகண்டு வெம்பும் நெஞ்சம் !
மணியான அலைநெறியாம் மொழியின் பற்றை
மறத்தமிழன் வீழ்ச்சியுற விட்ட தெண்ணித்
துணிவோடும் இயம்புகின்ற பாவல ரேறே
தூயதமிழ் வளமுறவே பிறந்த நாட்டில்
பணிவோடும் கனிவோடும் புரியு மாறு
பக்குவமாய்ச் செம்மையுற உழைக்கும் செம்மால்!

மொழிப்பற்றை உங்களிடம் நாங்கள் கற்றோம்;
மொழிவளர அயராது தொண்டை நல்கி
விழிப்படையச் செய்தீர்கள்; அய்யா ஏறே !
வியப்புடனே தமிழ்மணக்க, உலக மெல்லாம்
களிப்படைய வைத்தீர்கள்; உங்கள் தொண்டு
காலந்தான் விடையளித்தே அமைக்கும் பாதை!
நலிவுற்ற நற்றமிழர் விழிக்கும் காலம்
நாளென்றோ? வருமென்றோ? தமிழர்க் கென்றே !

'தென்மொழி'யாம் 'தமிழ்நில'மாம்'தமிழின் சிட்டா'ம்
தாய்மொழியைப் பேணுகின்ற இதழ்க ளெல்லாம்
பொன்மொழியாய்! பூந்தமிழை அணைத்துக் காக்கும்
பெருஞ்சித்திரன் தொண்டுமனம் நிலைத்துநின்றே
கண் இமைபோல தமிழ்உணர்வை எடுத்து இயம்பும்!
கனிச்சாறும் குறள்வளத்தைச் சான்று காட்டும்!
மண்இமைபோல் கடல்அலையாய் உதவும் நன்மை;
மாந்தஇனம் விழிப்புறவே தூண்டும் மேன்மை !

படல்விரித்து நயக்களித்துச் செய்தி சொல்லி
மலேசியத்தில் கால்வைத்து நம்மை யெல்லாம்
உடலாலும் உணர்வாலும் காண வந்த
உற்ற துணை தமிழ்மகனே வாழ்க நீடு !
கடல்அலைபோல் தொடரலையாய் எழுதிக் கொண்டு
கனித்தமிழாம் தனித்தமிழின்வளத்தைச்சொல்லித்
திடமுடனே பல்லாண்டும் இந்த மண்ணில்
தமிழ்வளர்க்க வேண்டுமையா நீங்கள் என்றும் !

இவ்வண்ணம்,
வே. தேசகுரு, செலயாங் பாரு.

மாண்பினை நிலைநாட்டிட வேண்டும்! மாநிலம் இதை அறிந்திடல் வேண்டும் !

—பாவலர். சின்னப்பனார்.

ஈரோட்டில் செய்த தீர்மானம் தன்னை
ஏன்நடை முறைபடுத் திடவில்லை—இஃது
எனக்குச் சரியெனப் படவில்லை—நம்
போராட்டம் உண்டா ? இல்லையா என்பது
பற்றிய அறிக்கையும் விடவில்லை—பிறர்
பழவுரைக கடமது தடையில்லை !

குறிப்பிட்ட நாளில் போர்நடந் திருந்தால்
கொள்கையும் புதுத்தளிர் விட்டிருக்கும்—
கொள்கைக்
கூனரின் நெஞ்சையும் தொட்டிருக்கும்—தமிழ்க்
குமுகா யப்பகை வடநாட் டரசின்
காதிலும் செய்தி பட்டிருக்கும்!—உலகக்
கவின்தமிழ் இனம்மகிழ் வுற்றிருக்கும் !

உண்மையில் ஊரும் நகரமும் நாடும்
உ.த.மு. கழகத்தை தெரிந்திருக்கும்—பெரும்
உலகமும் அதனைப் புரிந்திருக்கும்—தமிழ்
மண்ணின் விடுதலைத் தேவையை நம்பொது
மக்களின் அறிவும் கண்டிருக்கும்—கழகம்
மதிப்பும் புகழும் கொண்டிருக்கும் !

போராட்ட நிறுத்தம் பின்வாங்கல் என்ற
பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடமாச்சு—பிறர்
பகடிக்கும் நகைப்புக்கும் தடமாச்சு—மிகப்
பேராவ லோடு போர்வரு மெனவெதிர்
பார்த்தவர் ஏமாந் திடலாச்சு—விடுதலை
ஆர்வலர் மனமுடைந் தேபோச்சு !

போனது போகட்டும் இனிமே லாகிலும்
போரைத் தொடங்கித் தான்வேண்டும்-நமைப்
பழிப்பவர் வாயடங்கிட வேண்டும்—இன
மானமும் வீரமும் மடிந்திட விலையெனும்
மாண்பினை நிலைநாட் டிடல்வேண்டும்—இந்த
மாநிலம் இதையறிந் திடல்வேண்டும்.

தனித்தமிழகம்-தமிழரின் ஒரே குறிக்கோள்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும் ! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்.
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3) இதழ் எண் 74 (14-9-1986) (பகுதி 19-22

தமிழீழத் தீர்வே தமிழினத் தீர்வு!

பேச்சுரை என்னும் பெயரில் அரசியல் தில்லு மல்லுக்காரர்களுக்கும், ஆட்சியதிகாரக் கொடுமையாளர்களுக்கும், அரசியல் இரண்டகர்களுக்குமே, கொண்டாட்டங்கள் கூடி வருகின்றன. தமிழீழத் தமிழர்களின் நிலையோ, மேலும் மேலும் மிகவும் கொடுமையுற்று வருகின்றது.

வெட்ட வெளிச்சமாகத் தெரியும் செயவர்த்தனாவின் தமிழ் இன அழிப்பு முயற்சியையும், வெறியாட்டத்தையும், ஏதோ, புரியாதன போலவும், இவற்றில் ஏதோ மருமம் இருப்பது போலவும், இந்தியா நடந்துகொள்ளும் பசப்புத்தனங்களும், பதறுதல் இல்லாத மெத்தனங்களும், அவற்றுக்கு உகந்த நல்ல கையாட்களாகக் கிடைத்த அமிர்தலிங்கம் குழுவினரின் கையாலாகாத் தனங்களும், தமிழின அழிவை முடுக்கமாக்கிக் கொண்டுள்ளன. சா வருத்தம் கொள்ள வேண்டிய இக் காட்சிகளை யெல்லாம் சாகாமல் பார்த்துக் கொண்டிருக்கத்தான் வேண்டியிருக்கிறது.

வினை இந் நடவடிக்கைகளில் தமிழினப் போராளிகளையும் இழுத்துப் பிடித்து, அவர்களின் உள் வேகங்களைப் பிரித்தாளும் சூழ்ச்சிகளாலும், உள்ளுடைவுக் கரவடங்களாலும், அமைவுப் படுத்தி, அவர்களின் வீரப் போராட்ட முயற்சிகளை ஒன்றுமில்லாமல் செய்தும் வருகிறது, இந்தியா.

அவர்கள் தம் போராட்ட முயற்சிகளை நிறுத்திக் கொள்ளுமாறும், அவர்கள் அமிர்தலிங்கம் குழுவினர் தம் பேச்சுரைக்கு இடையூறாக எதுவும் கருத்துக் கூறாதிருக்குமாறும், ஏதிலிகளுக்கு ஆதரவு, போராளிகளுக்குப் புகலிடம் என்னும் தந்திர உத்திகளால் தடுத்து நிறுத்தப் பார்க்கிறது, இந்திய அரசு !

இந்தக் கொடுமைகளுக்கு எதிராக வாய்ப்பூட்டுப் போடப்பட்ட வீரக் காளைகளாகப் போராளிகள் கையமர்த்தம் செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு உட்படுத்தப்பட்டுக் கிடக்கின்றனர், போராளிகள். என்னே ! தமிழினத்துக்கு வந்த கொடுநிலை ! இந்த இனத்துக்கு என்றுதான் காலத்தால் பூட்டப்பட்ட அடிமை விலங்குகள் ஒடிக்கப்படுமோ, தெரியவில்லையே !

கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதைப் போல், தமிழீழக் கோரிக்கை, மாநில அதிகாரப் பகிர்வு என்னும் பேரத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு விட்டதே ! இந்தத் தீர்வையும் மானங்கெட்ட நிலையில் பேசி வரையறைப் படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கிடக்கிறதே, அமிர்தலிங்கம் கூட்டணி ! அழிக்கப்பட்ட தமிழீழப் பொதுமக்களின் சாம்பல் மேடுகளின்மீதும், புதைகுழிகளின் மீதும் இருந்து கொண்டன்றோ, அந்த இட்லரினும் கொடிய வல்லாண்மைக் கயவனிடம் பல்லிளித்துப் பேசிக்கொண்டிருக்கின்றனர், கோழையர் திலகங்களான இக் கூட்டணியினர். இவர்களுக்கு இனிமேலும் வீர உணர்வு வரும் என்பதை நாம் எப்படி எதிர்பார்ப்பது ?

எனவே, போராளிகளுக்குத்தான் நாம் ஏதாவது சொல்லியாக வேண்டியுள்ளது. அவர்களைத்தான், இனி இவ்வினம் நம்பியாக வேண்டியுள்ளது. ஆம் ! இனியும் கூட்டணியினரிடம் இருந்து நேரிடையாக இவர்கள் விலகி நிற்கிறார்கள் என்பதைக் காலந்தாழ்த்தாமல், உலகுக்கு உணர்த்திவிட வேண்டியதுதான் !

பதைத்துச் செத்துக் கொண்டிருக்கின்ற பொதுமக்களின் புதைமேடுகளை இனியும் பட்டியல் போட்டுக்காட்டி, உலக நாடுகளை உதவிக்குக் கூவி அழைக்கும் மாந்தத் தன்மை நிறைந்த போக்குகளை விடுத்து, இரக்கத்திற்கு அப்பாற்பட்ட சிங்களப் பதர்களை, நாம் நேருக்கு நேராகச் சந்திக்கின்ற போர்க்களப் போராட்டங்களை உடனடியாகக் கட்டமைக்க வேண்டியதுதான். அவற்றுக்கான உதவிகளை இங்குள்ள அரசியல் நோக்கும், வாய்வீச்சுத் தகிடுதத்தமும் நிறைந்த தமிழகத் தலைவர்களிடமும் இந்தியத் தலைவர்களிடமும், இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் பயனேதுமில்லை என்று உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

தொடர்—2.

பாவலரேறு அவர்களின் 2 ஆம் மலேசியச் சுற்றுச்செலவு!

[நிகழ்ச்சிச் சுருக்கம்]

இனி, 1-6-86 ஞாயிறன்று, ஈப்போ, சுங்கைப் பாரி சாலையில், உள்ள மாரியம்மன் கோயில் வழிபாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி குறிப்பிடத்தகுந்த ஒன்று.

இந்த நிகழ்ச்சி, மலேசிய இந்தியப் பேராயக் கட்சி (Malaysian Indian Congress) யால் ஏற்பாடு செய்யப் பெற்றது. இதனை ஏற்பாடு செய்திருந்தவர் அக் கட்சியின் பேரா மாநிலத் தலைவரும், முன்னாள் மேலவை உறுப்பின(Senator)ரும் பாவலரேறு அவர்களின் மலேசியச் செலவில் அவரை அழைத்த தமிழ் நெறிக் கழகத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவரும் ஆகிய டத்தோ குமரன் அவர்கள் ஆவார். (டத்தோ என்பது 'பெருமைக்குரிய' 'மதிதகு' என்னும் பொருள் தரும் பட்டம். இது மலேசிய அரசால் வழங்கப் பெறுவது) அவருடன் பேரா மாநில ம. இ. கா. செயலரும், இந்நாள் மேலவை உறுப்பினரும் ஆகிய மதிப்பிற்குரிய திரு. போ. இராசு அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர்களுடன் அக்கட்சியின் துணைச் செயலர் திரு. ந. மாரிமுத்து அவர்களும் இணைந்து நின்று உரையாற்றினர்.

இந் நிகழ்ச்சிக்கு, ஈப்போ, பாவாணர் மன்ற அமைப்பாளரும், தலைசிறந்த தனித்தமிழ்த் தொண்டரும், தென்மொழியைத் தொடக்க நாள்களில் மலேசியா முழுவதும் பரப்பியவரும், ஏறத்தாழ ஆயிரம் இதழ்களுக்கு மேல் விற்றுப் பெருந்துணை நின்ற ஆற்றல் மறவரும், தமிழறிவையும், பாப்புனையும் ஆற்றலையும் மலேசிய வட்டாரங்களில் பரப்பி, அங்கிருக்கின்ற பாவலர்களுக் கெல்லாம் முன்னோடியாக இருந்தவரும், இன்றும் இருப்பவரும், அங்குள்ளவர்களால் ஐயா பாவலர் குறிஞ்சிக் குமரனார் என்று அன்புடன் அழைக்கப் பெறுபவரும், பாவலரேறு அவர்களின் 1974-ஆம் ஆண்டைய முதலாம் சிங்கை மலேசியச் சுற்றுச் செலவில், அவர்களை ஈப்போவிற்கு அழைத்தும், ஏறத்தாழ பதினைந்து நாள்கள் தங்கியிருக்கச் செய்தும், கூட்டங்கள் நடத்தியும், அரிய பல பரிசுகளை வழங்கியும் பெருமைப்படுத்தியவரும் ஆகிய பாவலர் சா. சி. சுப்பையா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மற்றும் பாவலர் சா. சி. அவர்களின் அன்பு மாணவர்கள் ஆகிய பாவலர் எல்லோன், பாவலர் முத்துப்பாண்டியன் ஆகியோரும், பாவாணர் மன்றத்தின் இந் நாளையின் பொறுப்பாளர்கள் திருவாளர்கள் இராம. பெருமாள், டேவிட் ஆகியோரும் வந்திருந்து நிகழ்ச்சியை நிறைவுறுத்தினர். கூட்டம் நிரம்பி வழிந்தது. இத்தகைய சொற்பொழிவை வெறெங்கும், எந்நாளும், எவர்வாயிலும் கேட்டறியோம் என்று பலரும் வாயாரப் போற்றினர்.

சென்ற முதலாம் மலேசியச் செலவில் பெருமைக்குரிய சில நிகழ்ச்சிகளை நடத்திய ஈப்போ பாவாணர் தமிழ் மன்றம் இம்முறை ஒரு நிகழ்ச்சியையும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அதற்குக் கரணியம் என்று குறிப்பாக எதையும் கூறமுடியாது என்றாலும், அம்மன்றத்தில் விரும்பத்தகாதவர் சிலர் ஊடுருவி இருக்கிறார்கள் என்பதும், அதன் மூத்த முதல் அமைப்பாளர் பாவலர். திரு. சா, சி. அவர்களுக்கு எதிரான செயல்களில் சிலர் ஈடுபடுகிறார்கள் என்பதும் பிறர்க்குத் தெரிந்து கொள்ள முடியாத செய்திகள் அல்ல.

ஆனால், இக் குறைபாட்டை எவ்வாறேனும் நிறைவு செய்ய வேண்டும் என்னும் தளராத ஆர்வத்தாலும், பாவலரே அவர்கள் மேல் கொண்ட தணியாத ஆசையாலும் அக்கறையாலும், 'அவர்களைப் பெருமைப் படுத்தாமற் போனால், நான் உயிர்வாழ்ந்து என்ன பயன்' என்னும் வினாவை எழுப்பி, தளராத வினையுறுதியோடு, பாவலரேறு அவர்களின், அன்புக்கும் மதிப்பிற்குமுரிய பாவலர் திரு. சா. சி. சுப்பையா அவர்கள், தமிழ் நெறிக் கழகத்தாரின் முழு இசைவு பெற்றுப் பாவலரேறு அவர்கள் தமிழகம் திரும்புங்காலில், கடந்த 15-6-86 அன்று மாலை 7 மணி அளிவில், பாவாணர் மன்ற அன்பர்கள், தென்மொழி ஆர்வலர்கள், தமிழ் நலம் கருதும் பிற தமிழ்ச் செல்வர்கள் சிலர் ஆகியோரைக் கூட்டுவித்து, அவர்களின் இல்லத்தில், பாவலரேறு அவர்களுக்கு வழியனுப்புப் பாராட்டு நிகழ்ச்சியைச் சிறந்த விருந்தொன்றுடன் அமைத்திருந்தார்கள். அதில் கலந்துகொண்டு நன்றியுரையாற்றிய பாலலரேறு அவர்கள், பாவலர் திரு. சா. சி. அவர்களை தென்கிழக்காசிய செந்தமிழ்ச் செல்வர் என்று பாராட்டிப் பெருமைப் படுத்தினார்கள்.

இவ்விரண்டாம் மலேசியச் செலவில் நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியைப் பற்றியும் குறிப்பிட்டாகல் வேண்டும். மலேசியாவின் வடகோடியில் உள்ள பெர்லிசு (Perlis) மாநிலத்தில், கங்கார் என்பது தலைநகர். அவ்வூரில் 12-6-86 மாலை 6 மணியளவில், பெர்லிசு இந்தியர் சங்கச் சார்பில் ஒரு நிகழ்ச்சி. செலாமாவிலிருந்து ஏறத்தாழ 140 கல் தொலையில் உள்ள ஊர் அது. நிகழ்ச்சி பெர்லிசு இந்தியர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் மருத்துவர் சி. செயபாரதி என்பவர். அவ்வூரில் உள்ள தலைமை மருத்துவமனையில் கண்காணிப்பாளர். பெரிய பதவி. திரு. பாரதி அவர்கள் இலக்கியத் திறனும், மருத்துவத் திறனும் வாய்ந்த, சிறந்த பொதுத் தொண்டர். இலக்கியம், இந்துசமய ஈடுபாடு, மெய்ப்பொருள் அறிவு முதலியவற்றில், அவ்வூர் மக்கள் விரும்பும் அறிஞர். மதுரையில் மருத்துவக் கல்லூரியில் படித்தவர். அவர் படிக்கும் பொழுதில் தென்மொழியைப் பற்றியும், பாவலரேறு அவர்களைப் பற்றியும் ஓரளவு கேள்விப்பட்டவர்.

கூட்டத் தொடக்கத்தில், அவர்தம் முன்னுரையில் பாவலரேறு அவர்களின் ஆற்றலையும், தொண்டையும் பலவாறாகக் கூட்டத்தினர்க்கு விளக்கும் பொழுது, 'அவர் ஒரு தமிழ்க்கடல்; மிக்க ஆற்றல் வாய்ந்த பேரறிஞர்; சிறந்த தமிழின நலத் தொண்டர்; தூய தமிழில் மிகவும் அழகாகப் பேசும் திறனுடையவர்; அவரின் ஆற்றலையும், அறிவையும் நீங்களே அறிந்து கொள்ளலாம்' என முகமன் கூறி அமர்ந்தார். அதன்பின்னர், பாவலரேறு அவர்கள் இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். அப்பேச்சைக் கேட்ட சிலர் மிகவும் வியந்தனர்; சிலர் மகிழ்ந்தனர்; சிலர் அதிர்ச்சியுற்றனர். காரணம், பாவலரேறு அவர்கள் இந்து, இந்தியர் என்னும் போலி மதக்கோட்பாடுகளையும், போலி இந்தியப் பெருமைகளையும் சுக்கு நூறாக உடைத்தெறிந்து, உண்மையான அரசியல் கோட்பாடுகளையும், வரலாற்று நிலைகளையும், தமிழ்மொழிச் சிறப்புகளையும், தமிழர் சமய நெறிமுறைகளையும் பற்பல சான்றுகளுடன் எடுத்து முழக்கினார். இந்நிலை தலைவர்க்கும் இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்தியர் சங்க உறுப்பினர்களுக்கும் எதிர்பாராத தாக்குதல்களை உண்டாக்கியது.

இறுதியில், தலைவராக வீற்றிருந்து, பாவலரேறு அவர்களின் உரையை மிக்க ஆர்வத்தொடும், வியப்பொடும் கேட்டுக் கொண்டிருந்த அறிஞர். திரு. செயபாரதி எழுந்து, ஒலிவாங்கியின் முன் வீறு பொங்க நின்றார். அவரின் எடுப்பான அழகிய தோற்றத்தில் பெருமிதம் துளும்பி நின்றது. எதிர்பாராத இக் கருத்துகளைக் கேட்ட அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவையினர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்

அவர் இப்படிப் பேசினார்:

"பாவலரேறு அவர்களை என் முன்னுரையில் தமிழ்க்கடல் என்றேன்; ஆற்றல் வாய்ந்தவர்கள் என்றேன். ஆனால், அதற்கு மேல் அவர்களின் உரையால், என் இருபதாண்டுக் கருத்துகள் தலைகீழாகிப் போனதை உணர்கின்றேன். இவ்வளவு நாள் செய்த என் முயற்சிகள் வீணாகிப் போனதாக அறிகின்றேன். என்னை-என் கருத்துகளை இனி மறு ஆய்வு செய்து கொள்ளும்படி பாவலரேறு அவர்களின் உரைக் கருத்துகள் வலிமை மிக்கனவாக இருந்தன" என்று மனம் நெகிழ்ந்து கூறினார்.

பின்னர், அவர்தம் குடும்பத்துடன் வந்து, பாவலரேறு அவர்களைத் தம் இல்லத்திற்கு வந்துவிட்டுப் போகுமாறு கேட்டுக்கொண்டார். அப்பொழுது இரவு 11 மணி ஆகியிருந்தது. இந்த வேண்டுகோளைப் பாவலரேறு அவர்களும், பாவலர் திருமாலன் அவர்களும் ஏற்றுக்கொண்டு, 'வீட்டிற்கு வந்தால், ஏதும் உணவருந்த வற்புறுத்தக் கூடா'தென்னும் உறுதிமொழியின் மேல், அன்பர்களுடன் அவர் இல்லம் சென்றனர்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் 'ஊதியமே கூட்டணியின் குறிக்கோள்!

அரசைக் கேட்டால் பசுமைப் புரட்சி என்கிறது!
உழவனைக் கேட்டால் உருப்படாத புரட்சி என்கிறான்!
உழவன் உழைத்துக் கண்ட பயன்தான் என்ன?

(நீண்ட அறிக்கைதான். அருள்கனிந்து பொறுமையுடன் படித்துப் பாருங்கள்.

உழவுத்துறையில் இன்றையஅரசு ஏமாற்றுகள் அத்தனையும் விளங்கி விடும்.)

உழவர் பெருங்குடி மக்களே!

1947-க்குப்பின் நம் நாடு உரிமை அடைந்து' அனைத்துத் துறைகளிலும் முன்னேறியுள்ளோம் என்று கூறி, இன்று அறிவியல் ஊழியை நோக்கி முன்னேறுவோம் என்று அறிவியல் மயமாக்க, இன்றைய ஆட்சியாளர்கள் தங்கள் முழு வலிமையும் திரட்டி மிக வேகமாக செயல்படுகிறார்கள். இந்த அறிவியல் வளர்ச்சியால் கொண்டுவரபபட்ட பசுமைப் புரட்சித் திட்டத்தால் பலன் அடைந்தோர் உழவர்களா? வேற்று நாட்டு முதலாளிகளா? இந்த அறிவியல் வளர்ச்சி நம் நாட்டில் தானாக வளர்ந்ததா? அமெரிக்கா போன்ற நாடுகளின் சுரண்டல் கொள்ளைக்காகத் திணிக்கப்பட்டதா? உரம், உப்புரம் (யூரியா) போடும் புதிய வேளாண்மை முறையால் 20 ஆண்டுகளாக மீளாக் கடனாளியாக உழவன் இருக்கக் காரணம் என்ன?

உரம் போடும் புதிய வேளாண்மை முறை வருவதற்கு முன் நம்நாட்டு உழவு, விளைச்சல் முறை:

நாட்டு விதை, தழை, சாண எரு, இலை மக்கு, புண்ணாக்கு, ஏரி வண்டல போட்டுப் பயிர் செய்தோம். எடுக்கும் வேளாண்மைக்குப் போட்ட எரு அடுத்த வேளாண்மைக்கும் பயன்படும். நெல், சோளம், கம்பு, ஆரியம், (கேழ்வரகு) கடலை, பருத்தி, கரும்பு போன்று மாறி, மாறி விதைந்துச் சுழற்சி முறையில் பயிர் செய்தோம். ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகவும், நமக்குத் தவசமாகவும் கிடைக்கும். தவசம் சுவையாகவும், கனமாகவும் இருக்கும். மாறி, மாறி தவச உணவு சாப்பிட்டு உடல் உறுதியாகவும், நோயின்றியும் வாழ்ந்து வந்தோம்.

உழவன் வீட்டில் தங்க நகை, வெள்ளி, வெண்கலம் போன்ற பண்ட ஏனங்கள் வைத்து இருந்தோம். கோழி, ஆடு, மாடு, எருதுகளை வைத்து இருந்தோம். வயலுக்கு வேண்டிய சாண எரு கிடைத்தது. ஏரியில் மண் வெட்டி வயலுக்குப்போடுவோம் ஆடு, மாடுகளை ஏரியில் மேய்ப்போம். ஏரி மரத்தை ஏலத்திற்கு விட்டு, வரும்பணத்தில் ஏரியைத் தூர் எடுப்பதும், கரைகளைக்கட்டியும், மதகு கட்டியும், ஊர் மக்கள் பாசனத்திற்காகப் பயன்படுத்திப் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வந்த ஏரி, குளம், குட்டை, காடுகள் இவற்றையெல்லாம் இன்று அரசு நம்மிடம் இருந்து பறித்து, நமக்கு எதற்கும் உதவாத மருந்து நெய் (தைல) மரம, சவுக்கு, முள் மரங்களை நட்டுத் தாள் கூழ் உருவாக்கவும், நார்த் துணி உருவாக்கும் வெளிநாட்டு முதலாளிகளின் தொழிற்சாலைக்கு வெட்டியும அனுப்புகின்றனர். தாள் ஆலை, நார்த்துணி ஆலை முதலாளிகள் கொள்ளையடிக்க, நடுவண், மாநில அரசுகள் பச்சைக்கொடி காட்டி விட்டன.

குமுகக் காடுகள் என்ற பெயரால் நார், தாள் ஆலைகளுக்காகக்காடு, கானகங்களில் உள்ள மரங்களை வெட்டி அழித்ததால், பருவ மழை பெய்வதையே தடுத்து நிறுத்தி விட்டார்கள். மருந்து நெய் (தைல) மரங்கள், சவுக்கு முள் போன்ற மரங்கள், நிலத்தடி நீரை அதிகம் உறிஞ்சுவதால் கிணறு வரண்டு போகிறது. ஏரி மண் எடுப்பது தடுத்து நிறுத்தப் பட்டதால், ஏரி மண் வயலுக்குப் போட முடியாமல் போய்விட்டது. பெரிய அழிவு என்னவென்றால் ஏரி, குளங்களில் அரசு மரம் நட்டதால் ஆடு, மாடுகளை வளர்ப்பது அழிந்துவிட்டது. தழை, சாண எரு போட முடியாததால், வயலுக்கு உரம், உப்புரம் (யூரியா) போடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

ஏர் உழவு மாடுகள் இல்லை. அதனால் இயந்திரக் கலப்பை (டிராக்டர்) கொண்டு நிலம் உழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். உழவுக்கு வேண்டிய இடு பொருட்களின் விலையை அடிக்கடி உயர்த்தி, வெளிநாட்டு முதலாளிகள் உழவனின் சொத்தை, அட்டை அரத்தம் உறிஞ்சுவதுபோல் உறிஞ்சிக் கொழுக்கிறார்கள். தழை, சாண எரு, ஏரி மண் போன்ற உள்ளூர் பொருட்களைப்போட்டு உழவு விளைவு செய்யும்போது, உள்ளூர் மக்களுக்குத் தேவைக்கான உணவு, தவசம் மற்றும் பயன்படுத்தும் பொருட்களை விளைவு செய்தோம். நம் ஊர்ச் சந்தையில் நாமே விலை உறுதி செய்தோம். நம் மண்ணையும் காத்தோம், சொத்தும் வைத்திருந்தோம்.

இன்றைய உழவு முறையின் ஏமாற்றுகள்:

பசுமைப் புரட்சித் திட்டத்தில் உருவான புதிய வேளாண்மை முறையில் பயிர் செய்ப வீரிய விதை, உரம், உப்புரம், (யூரியா) கலவை உரம் (காம்பளக்சு) பூச்சி மருந்து, உந்துக் கலப்பை (மோட்டார் டிராக்டர்) மின்சாரம் அறுக்க, அடிக்க இயந்திரங்கள். பண முதலீடு, விற்பனைக்கான சந்தை போன்றவை வேண்டும். இவை அனைத்தும் உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள் அல்ல. வெளியிலிருந்து வெளிநாடுகளிலிருந்து வாங்கவேண்டிய பொருள்களாகும்.

அமெரிக்காவில் உள்ள மெக்சிகோ வேளாண்மை ஆராய்ச்சிப் பண்ணையில் உள்ள ஆய்வுக் கூடங்களில் அந்நாட்டு மண்ணின் தன்மைக்கேற்ப கண்டுபிடிக்கப்பட்டதுதாம் இந்த வீரிய வித்துகள் ஆகும்.

வறுமையே வரலாறாகக் கொண்ட இந்தியாவைப்போன்ற மூன்றாம் உலக நாடுகளில், பசுமைப் புரட்சித் திட்டம் என்ற பெயரால், வீரிய வித்து உருவாக்க முறையைத் திணித்தனர். நோயாளிக்குப் பிறக்கும் குழந்தையும் நோயாளியாவது போல், இந்த வீரிய வித்து ஒரு நோயாளிதான். பயிர் நட்டதிலிருந்து, அறுவடை செய்யும் வரை, நோய் நோய என்று நோயாகி, உழவனையும் நோயாளியாகவும், கடனாளியாகவும் ஆக்கிவிட்டது.

நம் வளமான மண்ணில் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 50 போன்ற வீரிய வித்துகளை நட்டு விளைச்சலுக்கு விளைச்சல் உரம், 'யூரியா' 'காம்பளக்சு' அதிகமாகப்போட்டு, மண்ணின் தன்மை கெட்டு, நிலம் பாலை நிலமாக மாறி வருகிறது. நல்ல தண்ணீர்கூட உப்புத் தண்ணீராகிப் போனது. உழவனின் நண்பனாக இருந்த மண்புழு, உரம் போட்டதால் அழிந்துபோயிற்று. பயிர்களைத் தாக்கும் நோய்ப் பூச்சிகளைத் தாக்கி உண்ணும் ஆயிரம் வகையான பூச்சி இனங்கள், மருந்து அடித்ததால் அழிந்து போயின. இன்று வகை வகையான மருந்து அடித்தும், நல்ல விளைவு எடுக்க முடியவில்லை.

ஒரு விளைவுக்குப் போட்ட முட்டுவழிச் செலவு, விளைவுக்கு விளைவு அதிகரித்துக் கொண்டேபோகிறது. நோய் அரித்தது போக, மீதமுள்ள விளைவை வணிகர்கள் நயமற்ற விலைக்குக் கேட்கிறார்கள். அரசு ஏற்படுத்தியுள்ள "ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்"துக்குக் கொண்டுபோனால், அதிகாரிகள் வைத்தது தான் சட்டம். அதிகாரிகள், வணிகர்கள் கூட்டுக் கொள்ளைக்காகக் கொண்டு வரப்பட்டதுதான் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடமாகும். இங்கு இவர்கள் கேட்ட விலைக்குக் கொண்டுபோன பொருட்களைக் கொடுத்துவிட்டுத் துண்டைத் தோள்மேல் உதறிப் போட்டுக்கொண்டு வரவேண்டியதுதான். கடன்பட்டும் கடினமாக உழைத்தும் விளைவுக்கு ஏற்ற நல்ல விலை கிடைக்கவில்லை.

அரசு தரும் கடன் தில்லுமுல்லுகள்:

1965-க்குப்பின் இப் பசுமைப் புரட்சித் திட்டத்தை உழவர்களிடம் புகுத்துவதற்காக, முதலில் மானியமும், பின் உரம், உப்புரம் இலவயமாகவும் தந்தார்கள். பின்னால் உழவர்களிடத்தில் அரசு கிணறு வெட்ட, வயல் சீர்படுத்த, பயிர்க் கடனாக, உந்தம் வாங்க் இயந்திரக் கலப்பை வாங்க, கறவை மாடு வாங்க, கோழிப் பண்ணை வைக்க, தென்னை நட, வாழை நட, கரும்பு நட, புகையிலை நட, மஞ்சள் நட ஆகியவற்றுக்கெல்லாம் கடன் என்று பலவகையிலும், நீண்ட காலக்கடன், குறுகிய காலக்கடன் என்று உழவன் தலையில் கடனைச்சுமத்தி, நிலையான கடனாளியாக ஆக்கிவிட்டார்கள்.

வாடிய பயிருக்குத் தண்ணீர் பாய்ச்ச உந்தம் போட்டால் மின்சாரம் இல்லை. மின்வாரியத்திடம் கேட்டால்,பருவ மழை தவறிப்போயிற்று; மேட்டூரில் தண்ணீர் இல்லை; அதனால் மின்சாரத் தட்டுப்பாடு என்கிறார்கள். அதே சமயம் பருவ மழை தவறிக் கிணறு வரண்டு விளைவு செய்யமுடியாத நிலையில் மின் கட்டணத்துக்காக மின் வாரியம், பற்றுகை (ஜப்தி)செய்யும்போது, மழையில்லை கிணறு வறண்டு போயிற்று, வறட்சியான இந்த நேரத்தில் மின் கட்டணம் எபபடிக் கட்டுவது என்று கெஞ்சிக்கேட்டால், 'இ'து அரசு உத்திரவு' என்கிறார்கள்.

அளவி (மீட்டர்) இருந்தபோது 100 உரு. 150 உரு. மின் கட்டணம் கட்டிய உழவர்கள், இன்று இரண்டு மடங்கு உந்தம் (மோட்டார்) இறைக்காமலே மின் கட்டணம் கட்டவேண்டும் என்று கூறிக் கண்ணில் பட்ட பொருட்களை எல்லாம் பறிமுதல் (ஜப்தி) செய்கிறான் கூட்டுறவுக்காரன் அண்டா, குண்டா, பண்ட ஏனங்களைத் தூக்கி தெருவில் வைத்து ஏலம் விடுகிறான். வைப்பகக்காரன் ஆடு, மாடு, மிதிவண்டி போன்றவற்றைப் பறிமுதல் செய்கிறான். அரசு கடனுக்காக வட்டாட்சியர், கதவு, நிலைவு, பெண்களின் தாலி முதலியவற்றைப் பறிமுதல் செய்கிறார். அறுந்து போன மிதியடி, பிய்ந்து போன துடைபபம், உடைந்த சட்டி இந்த மூன்றைத் தவிர, சாப்பிடும் தட்டைக்கூட பறிமுதல் செய்கிறான். இக் கொடுமைகளையும், நயமற்ற போக்கையும் அரசிடம் சொல்லிப் பறிமுதலைத் தடுத்து நிறுத்துங்கள் என்று கேட்டால் நடுவண் அரசைக் கேளுங்கள் என்று மாநில அரசு சொல்கிறது.

தரகு முதலாளியக் கொள்ளையர்கள்:

நடுவண் அரசைக் கேட்டால், இந்தக் கடனை நாங்கள் கொடுக்கவில்லை; உலகப் பொருள் நிறுவனமான I.B.R.T., I.D.A. போன்ற உலக வைப்பகங்கள் கொடுத்தது. இந்தக் கடன்களை அடைக்காவிட்டால், I. M. F.-இலிருந்து கடன் வாங்க முடியாது இக் கடனைத் தள்ளுபடி செய்யவோ, கடன் தண்டலைத் தள்ளிவைக்கவோ முடியாது என்று நடுவண் மாநில அரசுகள் உழவனின் குரல் வலையை நசுக்குகின்றன. உலகப் பொருள் நிறுவனமான I. B. R. T., I.D.A. வுக்கும் இந்தப் பசுமை புரட்சித் திட்டத்துக்கும் உள்ள உறவு என்ன? இரண்டாம் உலகப் போருக்குப் பின் இங்கிலாந்து வீழ்ச்சியடைந்த பின் அடிமை நாடுகளான மூன்றும் உலக நாடுகளைச் சுரண்டி ஆளுமை செலுத்த, வல்லரசு நாடுகள் கூட்டு சேர்ந்து அமைத்துக் கொண்ட நிறுவனம் தான் இந்த உலகப் பொருள் நிறுவனமாகும். இந்த உலக வைப்பகத்தில் உறுப்பு வைத்துள்ள வெளிநாட்டு முதலாளிகள், நம் நாட்டில் உள்ள டாடா, பிர்லா, பார்ப்பனிய, பனியா பார்சியா போன்ற ஒட்டுண்ணி முதலாளிகளுடன் கூட்டு வைத்தும், நடுவண் மாநில அரசுகளின், பாதுகாப்பு மற்றும் உதவியுடன் நம் நாட்டில் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளனர். இவர்கள் உருவாக்கம் செய்யும் உரம், உப்புரம், பூச்சி மருந்துகளை நம்நாட்டு உழவர்களிடம்தாம் விற்கவேண்டும். இதன் அடிப்படையில்தான் உரம், உப்புரம் போடும் புதிய வேளாண்மை முறையில் உழவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய தொடக்கக் காலத்தில் வீரிய வித்து விளைவு செய்வோர்க்கு மானியமும் உரம், 'யூரியா' இலவயமாகவும் உழவனுக்குக் கொடுத்து ஊக்கி வைத்தனர். கடைசியில் உரம், 'யூரியா' போடாமல் உழவு விளைவு செய்யமுடியாத நிலைக்கு நம்மைத் தள்ளிவிட்டார்கள். இந்த இடு பொருட்களின் விலையை மாதாமாதம் ஏற்றிக் கோடிக்கோடியாகக் கொள்ளையடிக்கின்றனர். ஒரு புறத்தில் இந்தக் கொள்ளை!

மறுபுறத்தில் நடக்கும் கடன்வழிக் கொள்ளை!

மறு பக்கத்தில் கரும்பு, வாழை நடக் கடன், பயிர்க்கடன் என்று பல வடிவங்களில் உழவன் தலையில் வைப்பகம், கூட்டுறவுக் கழகத்தின் மூலம் கடனைச்சுமத்தி, வட்டிக்கு வட்டி போட்டுப் பழைய கடனை அடைக்கப் புதுக்கடனை கொடுத்துக் கடன் வாங்கிக் கடனைக் கட்டும் அவலநிலைக்கு உழவனை உள்ளாக்கி, ஓட்டாண்டியாகவும், கடனாளியாகவும் ஆக்கிவிட்டார்கள். மறைமுகமான வஞ்சகமான இந்தப் புதிய சுரண்டல் முறையில் அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகள் உரம், 'யூரியா', பூச்சி மருந்து இயந்திரக் கலப்பை போன்றவற்றை நயமற்ற விலையில் விற்று ஈவு இரக்கமற்ற முறையில் உழவனைச் சுரண்டிக் கொள்ளையடிக்கின்றன.

நடுவண், மாநில அரசுகள், இந் நாடுகளின் சுரண்டலுக்குப் பக்கத் துணையாக இருந்து உழவனைக் கசக்கி பிழிகின்றன. **வெளிநாட்டு முதலாளிகள் உழவனைச் சுரண்டுவதற்காகத் திட்டமிட்டுக்**

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்க)

புதிய வேளாண் முறை உழவைக் கெடுக்குது!

தமிழ் நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை!

[மதுரை, சௌராட்டிரக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களின் வேண்டுகோள் !)

தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில், தமிழின் நிலை குறித்துத் தங்கள் நினைவிற்கும், செயலாக்கத்திற்கும் சில எண்ணங்களைத் தெரிவிக்கின்றோம். நாங்கள் சுட்டிக் காட்டியுள்ளவற்றை எண்ணிப் பார்த்துத் தமிழ் நெஞ்சங்களுக்கு நீங்களும் உணர்த்துவீர்கள் என்று நெஞ்சார நம்புகின்றோம்; தமிழ்க் காப்பிற்கு நாங்கள் தரும் சில வழிமுறைகள் செயல் ஆக்கம் பெற நீங்களும் உரிமையுடன் குரல் கொடுக்க வேண்டும் என்று விழைகின்றோம்.

1. தமிழகமெங்கும் புற்றீசல்கள் போல் பெருகி வரும், "நர்சரி"ப் பள்ளிகளில் தமிழ்க் கல்வி, பெரும்பாலும் "பெயரளவில்தான்" இருக்கிறது. பல பள்ளிகளில் தமிழ் "அகதி" போல் காட்சி தருகிறது. ஆங்கில வழிப் பள்ளிகளில்-நடுவண் கல்வித் துறையுடன் இணைந்துள்ள பள்ளிகளில் - "கான்வென்ட்" பள்ளிகளில் பயின்றதால், தம் பிள்ளைகளுக்கு அவ்வளவாகத் தமிழ் வராது என்று சொல்லிக்கொள்ளும் பெற்றோரின் போலித்தனம் நாளும் வளர்கிறது. தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில், தமிழ்க் கல்வி இருந்து ஆகவேண்டும் என்ற நிலை வரவில்லை என்றால், அடுத்த தலைமுறை, ஆங்கிலத் தலைமுறைக் குழந்தைகளை மட்டும் காண நேரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அங்கு வடமொழிக்குள்ள வரவேற்பும், இந்திக்குள்ள சிறப்பும் தமிழுக்கு இல்லை என்பது அவலமன்றோ?

2. மேல்நிலைப் பள்ளிகளில் தமிழுக்கு, வடமொழியும், பிரெஞ்சும், செருமனியும் மாற்று மொழிகள். இவற்றின் பாட அளவைப் பார்த்தால் தமிழுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் தெற்றெனப் புலனாகும். தமிழ் மாணவன் கழகப்பாடல் முதல், இன்றைய இலக்கியம் வரை பயில்கின்றான். ஆனால். பிறமொழி பயில்வோர் அம்மொழிகளின் அடிப்படை நிலைகளையே - மிகக் குறைந்த பாடங்களையே பயில்கின்றனர். இதனால் அம் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெறவும் முடிகிறது. இவர்களைப் போலத் தமிழ் மாணவர்கள் மதிப்பெண் வாங்க இயலுவதே இல்லை. வடமொழி பயில்வோர் பெரும்பாலும் தமிழிலோ, ஆங்கிலத்திலோ மட்டும் விடையெழுதுகின்றனர். பிறமொழிகளில் எழுதிவிட்டு, வடமொழி பயின்றவன் என்று கூறுவது, வடமொழிக் கல்வியும் ஆகாது; அது பகுத்தறிவுக்கும் பொருந்தாது. இந்நிலை கலைக் கல்லூரிகளிலும் தொடர்வது இன்னும் அவலமாகும். பிற மொழிகளைப் பயில்வோர் அம்மொழிகளில் மட்டும் தேர்வு எழுதவேண்டும் என்பது தான் அறிவார்ந்த பகுத்தறிவுப் பாடத் திட்டமாகும்.

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாநில முதன்மை பெறும் மாணவர்கள் பெரும்பாலும் தமிழ் பயிலாதவர்களாகவே இருக்கின்றனர். 'தமிழ் பயிலாமல், தமிழ் நாட்டில் முதன்மை மாணவன்' என்பதும் அவலமன்றோ? தமிழுக்கு மாற்று மொழிகளாகப் பிரெஞ்சு, செருமனி போன்ற மேல்நாட்டு மொழிகள் இருப்பதும் அறிவு நலம் சார்ந்த பாடத் திட்டமாகத் தெரியவில்லை. அம் மேல்நாட்டு மொழிகள், ஆங்கிலத்திற்கு மாற்று மொழிகளாக இருத்தலே பகுத்தறிவுக்குப் பொருந்துகின்ற அறிவார்ந்த பாடத் திட்டமாகும். தமிழ் நாட்டில் என்றோ உருவான இம் முரண்பாடான - பகுத்தறிவுக்கு ஒவ்வாத பாட அமைப்பு இன்றளவும் நீடிப்பது அவலத்திலும் அவலமன்றோ?

4. கலைக் கல்லூரிகளில் உள்ள எந்தப் பட்டப் படிப்பானாலும், முதல் பிரிவில் தமிழ்க் கல்வி கட்டாயமாக இருந்தாகவேண்டும் என்ற நிலை இன்றளவும் இல்லை. பி.பி.ஏ. போன்ற பட்டப் படிப்பில் மொழிப் பாடங்களே இல்லை. சில பட்டப் படிப்புகளில் மொழிப் பாடங்களுக்கு மாற்றுப் பாடமாக அப் "பட்டப் படிப்பின் மூன்றாம் பிரிவுப் பாடம் இடம் பெறுதலைக் காணலாம். மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் கூட்டுச்செயலகப் பட்டப் படிப்பில் (B.A.Corporate Secretary ship) தமிழுக்கு மாற்றுப் பாடமாக வணிக மேலாளுமையும், அலுவலக ஆட்சியும் (Business Management & Office Administration) இடம் பெற்றிருப்பது இதற்கோர் எடுத்துக் காட்டாகும். எதிர்காலத்தில் அறிவியல் வளர்ச்சியை உள்ளத்திற்கொண்டு, இயல்பியலில் அணுக்கதிர் இயக்கமும், கணக்கியலில் கணிப்பொறியும் மொழிகளுக்கு மாற்றுப் பாடங்களாக அமைந்தால், தமிழ் தெருவில்தான் நிற்க நேரும். மாற்றுப் பாடங்களும், வேற்று நாட்டு மொழிகளும் ஆங்கிலத்திற்கு மாற்றாக இருக்க வேண்டும் என்று கூறினால், எதிர்ப்பு எந்தத் திசையிலிருந்து வருகிறது என்பதைக் காணலாம். எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்திலேயே பயிலும்போது - அஃதாவது ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும் போது - அவனுக்கு ஆங்கிலம் தேவையில்லை என்ற ஒரு கருத்தை முன்வைத்தால், எதிர்ப்போர் யார்? அவர்தம் எண்ணம் யாது? என்பன மிக எளிதில் விளங்கும்.

5. மேல்நிலைப் பள்ளி முடிய ஒரே மனநிலையில் பயிலும் மாணவர்கள் கல்லூரிகளில் மொழிப் பாடங்கள் இல்லாத பட்டப் படிப்பில் சேர்ந்தவுடன் தம்மை "மேலானவர்களாக" எண்ணிக் கொள்ளும் நிலையே வளர்கிறது. பி.பி.ஏ., பி. காம் போன்ற தொழிற் கல்விகளுக்கு மொழிப் பாடங்கள் தேவையில்லை என்ற போலித்தனமான தருக்கமும் தமிழ் நாட்டில் நிலவுகிறது. ஆனால், பொறியியல், மருத்துவம், பல்தொழில் நுட்பக் கல்வி போன்றவற்றில் ஆங்கிலம் இருப்பதை அவர்கள் மறுப்பதில்லை! ஒவ்வோராண்டும் முத்தமிழ் விழாக் கொண்டாடித் தம் தமிழ்க் காதலை வெளிப்படுத்தும் அம் மாணவர்கள், ஆங்கிலம் பயில்வதைப் போல், தமிழும் பயிலலாமே! ஆங்கில மொழியை நம் வீட்டுச் சாளரம் என்றார் 'பண்டித' சவகர்லால் நேரு. ஆனால், நாம் இந்தியை எதிர்ப்பதாக எண்ணி ஆங்கிலத்தை நம் வீட்டு வாசலாக்கி, மாக்கோலமிட்டுப் பொங்கலிட்டு வழிபடத் தொடங்கி விட்டோம்! தமிழ், நாளடைவில் தொல்பொருள் ஆய்வகத்திற்குச் சென்று முடக்கினாலும் வியப்பதற்கில்லை!

6. தமிழ்க் காப்பு நெஞ்சங்கள் இவ்வுணர்வுகளை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம். இந்தியா முழுமைக்கும் வரவிருக்கும் புதிய கல்வித் திட்டத்தில் கூட, மொழிக் கல்வி பெரிதும் குறைந்துவிடும் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இப் புதுக்கல்வி பற்றிய கருத்துகளைக் கூறும்போது, அறிவியல் பேராசிரியர்கள் பலரும், கல்லூரிகளில் மொழிக் கல்வியே இருக்கக்கூடாது என்று பரிந்துரைக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறார்கள். கலைக் கல்லூரிகளில் தமிழுக்குள்ள நேர அளவையும் குறைப்பதற்கான "தமிழத் தொண்டும்"! நடைபெறுவதாகப் பேசப்படுகிறது. ஆங்கிலத்திற்குரிய நேரம் அப்படியே இருக்குமாம்! "நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்" என்னும் புறநானூற்றுத் தொடர் இத்தகையோரைப் பார்த்து எதிரொலிக்கிறது. "உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்" என்ற புலவருள்ளம் இவர் போக்கைக் கண்டு துடிக்குமன்றோ! "என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்று பாரதியார் பாடிய அவலக்குரல் இவர்களுக்கே முழுமையாகப் பொருந்தும் எல்லாம். *பட்டப் படிப்புப் பயின்றும் ஆங்கிலத்தில் எழுதத் தெரியவில்லையே என்று வருந்துவோர், தமிழின் நிலைபற்றி எண்ணிப் பார்க்கத் தவறிவிடுகின்றார்கள் என்பதும் வருத்தத்தையே தருகிறது.*

7. தமிழ் காக்கும் நெஞ்சங்கள் இன்றே, முனைந்து செயல்பட வேண்டும் இன்றேல் எதிர்காலத்தில் மிகவும் வருந்த நேரும் "அப்போதைக் கப்போதே சொன்னேன் அரங்கமா நகருளானே" என்று ஆழ்வார் பாடிய திருப்பாசுரத் தொடரை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம். "கெடலெங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க" என்று பாவேந்தர் பாரதிதாசன் ஊட்டிய தமிழ் உணர்வு மீண்டும் தமிழகத்தில் தோன்றவேண்டும். 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்' தமிழ் மொழியில் காணப் பிற துறைக் கல்விக்குத் தமிழ்க்கல்வி இன்றியமையாதது என்னும் உண்மை உணர்வு வாழவேண்டும். வெறும் எந்திர மயமான கல்வி நிலையிலிருந்து விடுபட்டு, மன வளத்திற்கும், பக்குவத்திற்கும், செழுமைக்கும் காரணமான இலக்கியக் கல்வியும் இணைந்த கல்வியே "மாந்தனை" உருவாக்கும் என்னும் உண்மை பரவவேண்டும். 'கம்ப்யூட்டர்' கல்வி எந்திரங்களைத் தரலாம்; தொழில் நுட்பங்களைக் காட்டலாம்; விண்வெளியைச் சாடுகின்ற விசையைத் தரலாம். ஆனால், அது, "முழுமையான மாந்தனை"த் தராது என்பது முற்றும் உண்மை!

8, *"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்"* என்பது *வெறும் முழக்கமாக இருந்துவிடக் கூடாது. தமிழ் பயின்றோர்க்கும், தமிழில் பயின்றோர்க்கும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குவது, அரசினரின் தலையாய கொள்கையாக இருத்தல்வேண்டும்.* தமிழ்க் காப்பு மேடைகளிலும், கருத்தரங்குகளிலும் மட்டும் இல்லை. *தமிழ்ப் பல்கலைக் கழகமும், உலகத் தமிழ்ச் சங்கமும் மட்டுமே தமிழ்க் காப்பிற்குரியன என்று கூறிவிட முடியாது. தமிழ் நாட்டுக் கல்விக் கூடங்களில், தமிழின் நிலையில்தான் உண்மையான தமிழ்க்காப்பு இருக்கிறது என்னும் உண்மை வாழ வேண்டும்.*

9. தொகுப்பு: மழலையர் (நர்சரிப்) பள்ளி முதல் கல்லூரி வரை — தமிழ்க் கல்வி இருந்தாக வேண்டும். தமிழுக்குப் பிறநாட்டு மொழிகள் மாற்று மொழிகளாக இருக்கக்கூடாது. பட்டப்படிப்பு முதற் பிரிவில் மொழிப் பாடங்கள் மட்டுமே இடம்பெற வேண்டும். தமிழுக்கு மாற்று மொழிகளாக அமையும் இந்திய மொழிகளின் பாட அளவும், அமைப்பும் தமிழ் போன்று இருத்தல் வேண்டும். மொழிப் பாடங்கள் இல்லாத பட்டப் படிப்புகள் கலைக் கல்லூரிகளில் இருப்பதில் பொருளில்லை என்பது உணர்த்தப்படல் வேண்டும். தமிழ்க் காப்பிற்குரிய இந்நிலைகள் உருவாக பள்ளி, கல்லூரித் தொடர்பான அமைப்புகளில் குரல் ஒலிக்கவேண்டும். பல்கலைக் கழகக் கல்விப் பேரவை, பொதுப் பேரவை ஆட்சி மன்றம் ஆகியவற்றில் இவ்வுணர்வுகளை எடுத்துக் கூறித் தமிழ்க் காப்பிற்கு ஆவன செய்யவேண்டும். பள்ளி, பல்கலைக் கழகம் போன்றவற்றின் பல்வேறு செயலாக்கக் குழுக்களில் தாங்களோ, தங்கள் உறவினர்களோ, தங்கள் நண்பர்களோ இடம் பெற்றிருந்தால் இவ்வுணர்வுகளை தகுந்த தீர்மானங்களாக அமைத்து வலியுறுத்த வேண்டும் என்பது எங்கள் பேரவா.

10 உண்மையான தமிழன்பின் வெளிப்பாடான இவ்வுணர்வுகள் காக்கப்படவில்லை என்றால்,

" சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை,
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்"
என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசைஎனக் கெய்திட லாமோ?

என்று தமிழ் உணர்வுடன் பாரதியாரிடம் தமிழ்த்தாய் சுட்டிக்காட்டிய "பேதை" உண்மையிலேயே 'மேதை' தானோ என்றும் வினாவே எழும்.

" அரியா சனமுனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே?"—தமிழ் விடு தூது.

வெல்க என்றுமுள தமிழ்க்காப்பு!
வாழ்க தமிழினம் !!
வாழிய தமிழ் !!!

அன்புள்ள,

பர். பு. மு. சாந்தமூர்த்தி, க.மு., அறி.மு
பேராசிரியர். வி. சோலை, க.மு., இ ப.
,, கு. வே. இராமகோடி, க.மு, இ.ப.
,, தூ. ரா. சுப்பிரமணியன், க.மு, மெய்.மு.

[4 ஆம் பக்கத்தொடர்ச்சி]

கொண்டுவரப்பட்டதுதான் இப் பசுமைப் புரட்சித் திட்டத்தை உள்ளடக்கிய புதிய சுரண்டல் முறை. வெளிநாட்டு அறிவியலை தொழில் நுட்ப வல்லாளுமையால் நுட்ப வளர்ச்சியையே அழித்து விட்டார்கள். இயற்கைச் சூழலோடு அமைந்து இருந்த சிற்றூர்ப்புற உழவு விளைவு முறையை அழித்துவிட்டார்கள். ***வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நம் தாய்மொழியான தமிழ் மொழியை அழிப்பதற்கான அனைத்துச் சூழ்ச்சிகளையும் செய்து வருகிறார்கள்.*** பல்வேறு உழைக்கும் மக்களை வஞ்சித்துச் சுரண்டி நசுக்கிவரும் இந்தப் புதிய சுரண்டல் முறையைத் தகர்த்தெறிந்து, நம் மண்ணையும், உழவனின் உடைமை மற்றும் உரிமைகளையும் வென்றெடுக்க உழவர் பெருங்குடி மக்களே ***'தமிழக உழவர் சங்கத்தில்'*** சேருவீர்.

அரசே இக் கோரிக்கையை உடனே நிறைவேற்று!

1. வெள்ளைக்கார ஆளுநர் வெல்லெசுலி வளவரால் போடப்பட்ட நிலவரிச் சட்டத்தை நீக்கம் செய். (R. R. Act.)
2. உழவு விளைவு செய்ய முடியாமல் வறட்சியால் வாடி வதங்கிப்போன உழவனின் அனைத்துக் கடன்களையும், மின் கட்டணத்தையும் நீக்கம் செய்.
3. உரம், உப்புரம் போன்ற உழவு விளைவுக்கான இடு பொருள்களின் விலையைக்குறை.
4. உணவு விளைவுப்பொருள்களுக்குவிலை உறுதி செய்ய உழவர்களை உள்ளடக்கிய குழு அமைத்து விலை உறுதி செய்.
5. ஏரி, குளம், குட்டைகளில், மரம் நடுவதை நிறுத்தித் தூர் எடுத்துச் சிறிய நீர் பாசனத் திட்டங்களை நடைமுறைப் படுத்து! மலை, காடுகளிலிருந்து வரும் ஆறுகளில் நீர்ப் பாசனத்துக்கேற்ப நீர்த்தேக்க (தடுப்புகள்) அணைகள் கட்டு.
6. கிணறு அடிவெட்டு வெட்ட நீண்டகாலத் தவணையில் கடன் கொடு.
7. பூலாம்பட்டி, காவேரி ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி, மணிமுத்தாற்றுடன் இணைத்து இடைப்பாடி, கொங்கணாபுரம், அ. புதூர், இளம்பிள்ளை-போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடு.
8. உழவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு (கட் சர்வீசு) ஒற்றை விளக்குப் போட்டுக்கொடு.
9. குடிக்கத் தண்ணீர் இன்றி வறட்சியால் வாடும் கூலி உழவுத் தொழிலாளர்களுக்கும் சிற்றூர் மக்களுக்கும் ஆழ் குழாய் கிணறு, அடிப்புக் குழாய் (போரிங் பைப்) போட்டுக் கொடு.

வெளியீடு: ***"தமிழக உழவர் சங்கம்"***
சேலம் மாவட்டம்.

கெடலெங்கே தமிழின் நலம்-அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!

பாவலரேறு அவர்களின் 2-ஆம் மலேசியச் சுற்றுச்செலவு!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பாரதி அவர்களின் வீடு நல்ல வளமனை. அவர் மிகுந்த செல்வர். சிறந்த நூல்களைக்கொண்ட நூலகம் ஒன்றை அவர் இல்லத்தில் வைத்திருந்தார். அந் நூலகத்தைப் பாவலரேறு அவர்களும் தமிழ்நெறிக் கழக அன்பர்களும் பார்வையிட்டனர். பின்னர், திரு. பாரதி இல்லத்தினர் கொடுத்த சூடான தேநீரை அருந்திவிட்டு, அவரிடம் அன்புடன் விடைபெற்றுச் சென்றனர். திரு. பாரதி அவர்கள் இறுதிவரை, பாவலரேறு அவர்களின் கருத்துரையால் ஏற்பட்ட தம் மனயாற்றத்தை வலியுறுத்திக் கொண்டே இருந்தார்.

16—6—85 திங்கள் மாலை நடந்த ஒரு கலந்துரையாடலும் மிக முகாமை வாய்ந்தது. பாவலரேறு அவர்கள் அனைத்து நிகழ்ச்சிகளையும் முடித்துக் கொண்டு, அன்று காலை 4 மணியளவில், தமிழ்நெறிக் கழகத் தலைவர், இன்னும் அன்பர்கள் சிலர் உடன் வர கோலாலம்பூர் சென்றனர். அங்கிருந்து செலாங்கூர் சென்று **சா ஆலம்** பகுதியில் உள்ள, அதன் மாநில நிகராண்மைக் குழுத் தலைவர் திரு **முனுசாமி** அவர்களின் இல்லத்தில் முற்பகல் முழுவதும் தங்கியிருந்தனர்.

திரு. முனுசாமி அவர்களும், அவர் துணைவியாரும் பாவலரேறு அவர்களிடம் தனியன்பு கொண்டவர்கள். அவர்களின் குடும்பமே தூய நல்லன்பின் உறைவிடம். அவர்களின் இல்லத்தில் அனைவர்க்கும் காலைச் சிற்றுண்டியும், பகல் விருந்தும் தரப்பட்டன.

இரவு விருந்து, தெலுக்கான்சன் பகுதியிலுள்ள திருவாளர்கள்: **மாரியப்பன்-வெற்றிச்செல்வி** அவர்களின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. திரு. மாரியப்பன் அவர்களும், அவர் துணைவியாரும் கோலாலம்பூர் பகுதியில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் தவறாது வந்திருந்தனர். 31-5-86 காரி இரவு செலாயங்பாரு என்னுமிடத்தில் நடந்த நிகழ்ச்சியில், பாவலரேறு அவர்களுக்கு மாரியப்பன் இணையர், மிகு விலை மதிப்புள்ள (Hitachi) என்னும் நாடாப்பதிவு இணைந்த வானொலிப்பெட்டி ஒன்றை அன்பளிப்பாகத் தந்திருந்தனர். அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதால் அவர்களின் இல்லத்திற்கு வரவும், அவர்கள் அன்புடன் தந்த இரவு விருந்தில் கலந்துகொள்ளவும் பாவலரேறு அவர்கள் இசைந்திருந்தார்.

இரவு விருந்துக்கு முன், அன்று மாலையில் அளித்த சிற்றுண்டி வரவேற்பின் பொழுது, திரு. மாரியப்பன் அவர்களின் நண்பர்களும், பிற தமிழ்நெறிக் கழகத்தினரும் பாவலரேறு அவர்களிடம் தமிழர் மெய்ப்பொருள் தொடர்பாகப் பலவகையான கருத்து விளக்கங்களைக் கேட்டனர். அவற்றுக்குப் பாவலரேறு அவர்கள் கூறிய விளக்கங்கள், வேறு எங்கும்-யாவரும் கூறாத அறிவியலும், மெய்யறிவியலும் தழுவிய புதுமை விளக்கங்கள். ஏறத்தாழ 2 மணி நேரம் கூறிய அவ் விளக்கங்கள் ஒரு நூலாகும் தகுதியுடையவை. பதிவு செய்யப்பெற்ற அவ்வுரைகள் நூல் வடிவில் வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

அன்பர்களின் அனைத்து ஐயங்களுக்கும் அவர்கள் மனங்கொள்ளுமாறு விடையளிக்கப் பெற்ற அக் கலந்துரையாடலுக்குப் பின்னர், அனைவர்க்கும் மாரியப்பன் இணையர் இனிய, சுவையான விருந்தொன்றைப் படைத்தனர். இறுதியில், திரு. மாரியப்பன் இணையர் தம் மின்னணுவியல் பொருள்களின் விற்பனையகத்தைப் பாவலரேறு உள்பட அன்பர்கள் அனைவர்க்கும் சுற்றிக் காட்டினர். முடிவில் தங்கள் அன்பின் வெளிப்பாடாகப் **பாவலரேறு** அவர்களுக்கும், தமிழ்நெறிக் கழகத் தலைவரும், அமைப்பாளருமாகிய பாவலர் திரு. **திருமாலன்** அவர்களுக்கும் உயரிய வேட்டிகளையும், துண்டுகளையும் பரிசாக அளித்துப் பெருமைப்படுத்தினர்.

இவ் விரண்டாம் மலேசியச் சுற்றுச்செலவிலேயே மிகவும் வருத்தமான, என்றென்றும் நினைவிலேயே வைத்திருக்கக் கூடிய நிகழ்ச்சி ஒன்று உண்டு. அது தான் தொடக்கக் காலத்திலிருந்து, இறுதி நாள் வரை தென்மொழிக்கே மூச்சுயிர்த்த தென்மொழி மறவர் **அன்பரசனின்** மறைவு நிகழ்ச்சி. அன்பரசனைப் பற்றிக் கேட்கும்பொழுது, பாவலரேறு அவர்கள் இப்படி நினைவு கூர்கிறார்:

"அன்பரசனின் மறைவுபற்றி நினைக்கும்பொழுது என் கண்கள் குளமாகின்றன; நெஞ்சாங்குலை நடுங்குகின்றது! உயிர் திக்குமுக்காடுகின்றது. அவரும் அவரின் அன்புத் துணைவி **பாவையும்**, என் முதல் சிங்கை மலேசியச் செலவின் பொழுது, 1974 இல் (அப்பொழுது அவர்கள் சிங்கப்பூரில் இருந்தனர்) என்னிடம் காட்டிய அன்புக்கும், மதிப்புக்கும் ஈடு இணையே இல்லை! இப்பொழுதும்கூட என்னிடத்தில் அவர்களைப்போல் அன்பைப் பொழிபவர்கள் எவருமே இல்லை. இருவரும் எனக்குப் பிள்ளைகளாகப் பிறந்திருக்க வேண்டியவர்கள். அக்கால் நானும், பாவலர் திரு. **முல்லைவாணனும்** அவர்கள் இல்லத்தில் நான்கைந்து நாள்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. அப்பொழுது அவர்களுக்கு முல்லை, பூங்குன்றன், என்று இரண்டு குழந்தைகள். அந்தக் குழந்தைகள் என்னிடத்தில் அப்படி ஒட்டிக்கொண்டன. ஆனால், அவர்கள் காட்டிய அன்பு அக் குழந்தைகளை விடத் தாய்மையாக இருந்தது."

"திரு. முல்லைவாணனும், அன்பரசனும் இரட்டைப் பிள்ளைகளைப் போலும், உடன் பிறந்தவர்களைப் போலும் நட்புக் கொண்டவர்கள். எங்கும்-எவ்விடத்தும், எதிலும் இருவரும் ஒருவாகவே இயங்குபவர்கள். அவர்கள் கருத்து வேறுபாடுகொண்டு சண்டையிட்டுக்கொள்ளும் பொழுதுங்கூட, அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பு, அவர்கள் பரிமாறிக் கொள்ளும ஒவ்வொரு சொல்லிலும் பளிச்சிடும். இருவரும் ஒருவரையொருவர் 'அடா, புடா' என்றுகூட திட்டிக்கொள்வர். ஆனால், அவ்வொருமை உரையிலும் அவர்கள் இருவரும் கொண்ட ஒருமையுணர்வு குமிழியிட்டு, அருகில் உள்ளவர்களுக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கும். **'நட்பிற்கு முல்லையும், அன்பரசனும்'** என்னும் புதுமொழியைக்கூட உருவாக்கிக் கொள்ளலாம்."

"இருவராலுமே சிங்கைப் பகுதியில் தென்மொழி உணர்வு, ஆல்போல் தழைத்து வளர்ந்தது. சிங்கையில் பாவாணர் மேலும், என் மேலும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் பற்றுக் கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் இவ்விருவருமே!"

'அன்பரசன் ஒருமுறை எனக்கெழுதிய மடலில் குறிப்பிட்டிருந்தார்; 'ஐயா நீங்கள் தமிழகத்தில் இருந்து கொண்டு 'உடனே வரவும்' என்று அழைத்தால், உடனே வங்கக் கடலில் குதித்து நீந்தியே வந்துவிடுவேன்' என்று! அவர் அப்படி எழுதியிருந்தது மிகையான உணர்வால் அன்று. சொன்னதை எதுவானாலும் செய்துவிடும் ஆற்றல் மறவர் அன்பரசன். அவரைப்போல் வேறு ஒருவரைக்கூட பார்ப்பது அரிது. அவ்வளவு அன்பும், மதிப்பும், நம்பிக்கையும் அவரிடம் என்பால் நிரம்பி வழிந்தன."

"அந்த அன்புதான் அவரைக் கொன்றது. ஆம், அவர் தம் மனைவி மேலும், இக்கால் உள்ள அவரின் ஏழு குழந்தைகளின் மேலும் செலுத்திய அன்புக்கு மேலாகவே என்பால் அன்பு வைத்திருந்தார் எனில் மிகையாகாது. உண்மை! அந்த அன்புருவத்தைத் தான் நான் இவ்விரண்டாம் மலேசியச் செலவின் பொழுது பறிகொடுத்து விட்டேன். 'ஐயா, ஐயா' என்று உயிர் குழைய, உள்ளம் மணக்க அவர் அழைத்த அன்பொலிகள் என் உயிர் உள்ளளவும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்."

"என் தமிழுணர்வால் கட்டுண்டிருந்த அவர் என் தமிழ்ப் படைப்புகளை உயிர் ஊறப் படித்துச் சுவைப்பார். அத் தமிழுக்காகவே உயிர் வாழ்ந்தார். அத் தமிழுக்காகவே தம் இன்னுயிரையும் ஈந்தார். அவர் சடலத்தைச் சுற்றி நின்று அவர் பிள்ளைகளில் மூத்த முல்லை என்னும் பருவம் வந்த பெண், கதறிக் கதறி அழுத வண்ணம், "அப்பா, தாத்தாவை (என்னை) அழைத்து வரப் போனீங்களே, தாத்தா வந்துவிட்டார், அப்பா! எழுந்திரு அப்பா" என்று கூறிக் குமைந்த காட்சியும், அவரின் அன்புத் துணைவியாகிய பாவை, "ஐயா, ஐயா! என்று கூறிக் கொண்டிருந்தீர்களே! ஐயா, உங்களைப் பார்க்க வந்திருக்கிறாரே! நீங்கள் கண்களை மூடிக் கொண்டீர்களே! ஐயாவை வரவேற்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தீர்களே! இப்பொழுது ஐயா வந்திருக்கிறாரே! நீங்கள் எங்கே போய்விட்டீர்கள் ?" என்று வினவி அழுத காட்சியும் என் உயிரிலேயே இன்னும் புகைந்து கொண்டுள்ளன.

"ஆம்! அவர் என்னை அழைத்துப் போகத்தான் வந்தார். இரண்டாம் முறை நான் மலேசியா வருகிறேன் என்று தெரிந்து மகிழ்ந்து கூத்தாடியிருக்கிறார். அவர் குடும்பம் இக்கால் சிங்கப்பூரிலிருந்து மலேசியாவின் தென்முனையிலுள்ள **சோகூர் பாரு** என்னும் ஊருக்குக் குடிபெயர்ந்து சென்றுவிட்டது என்பதை முல்லைவாணன் முன்பே எனக்குச் சொல்லியிருந்தார். நான் மலேசியாவின் வடபகுதி ஊராகிய செலாமாவில் தங்கியிருந்த பொழுது, **16-5-86** அன்று இரவில் **அன்பரசன்** என்னிடம் சோகூர் பாருவிலிருந்து தொடர்பு கொண்டார். தொலைபேசியில் என் குரலைக் கேட்டவுடன், அவர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆம்; நாங்கள் 1974 சூன் மாதம், 9 ஆம் பக்கல்தான் இறுதியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். முதலாம் சிங்கை-மலேசிய நாடுகளில் மூன்று மாதச் செலவை முடித்துக்கொண்டு; தமிழகத்திற்குத் திரும்ப நான் வானூர்தி ஏறிய நாள் அது! அன்பரசனும்-பாவையும், குழந்தைகளுடன் வானூர்தி நிலையம் வந்திருந்து, அழுத கண்ணும் - சிந்திய மூக்கும், அரற்றிய வாயுமாய் என்னை வழியனுப்பி வைத்த நாள் அது! அதற்குப்பின், பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. இதற்கிடையில் அன்பரசன் - பாவை இணையர் ஏழு குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆயினர்."

"16—5—86 அன்று என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அன்பரசன், ஒன்றுமே பேசவில்லை. மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருந்தார். தொலைபேசியில் அவர் அழைப்பதாகச் சொன்னவுடன் நான் அதைக் கையிலெடுத்து, **'என்ன தம்பி அன்பரசன், நலமாக இருக்கிறீர்களா?'** என்று பேச்சுக் கொடுத்தேன். என் குரலைக் கேட்டவுடன் மறுமுனையிலிருந்த அவர், மகிழ்ச்சியால் துள்ளியவாறு, (அவர் செயல் நெடுந்தொலைவிலிருந்த என் நெஞ்சத் திரையில் தெளிவாகத் தெரிந்தது,) 'ஐயா, அஃகஃகஃகா! ஐயா அஃகஃகஃகா!' என்று தொடர்ந்து வெடிப்புச் சிரிப்பொலியைச் சிந்தினாரே தவிர, வேறொன்றுமே பேசவில்லை. நெடுநேரம் கழித்தத்தான் "26-5-86 **திங்களன்று** (அன்றிலிருந்து சரியாகப் பத்து நாள்களின்பின்) **நீங்கள் இங்கு நிகழ்ச்சிக்கு வருகிறீர்கள், பாவையும், பிள்ளைகளும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். நான் இடையிலேயே வந்து அழைத்து வருவேன்'** என்று கூறி முடித்தார்.

"அவர் சிரித்தது எதற்கு? அவர் சொன்னதன் பொருளென்ன? என்பதையெல்லாம், அவர் இல்லத்தில் அவரைச் சடலமாய்ப் பார்த்த 25-5-86 ஆம் நாளன்றுதான் விளங்கிக்கொண்டேன்." -(தொடரும்)

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமக்கு நாமேதாம் போராளிகள்; துணையாளிகள்; விடுதலை வீர மறவர்கள்! நம்மால் முடிந்ததை இரண்டில் ஒன்று, முடிந்த அளவில் பார்த்துவிட வேண்டியதுதான்! இனியும் காலங் கடத்திப் பயனில்லை; நம்மிடமுள்ள கருவிகள், நான்கைந்து நாள் போருக்குக்கூட போதாதவைதாம். இருப்பினும், நம் வீரமும், அறிவுக் கூர்மையும் முனை மழுங்காத போர்க் கருவிகளாக நம்மிடம் உள்ளன. இவற்றைக்கொண்டு நாம் வாழ்வதா-சாவதா என்று முனைந்துவிட வேண்டியது.

தமிழீழத் தீர்வில்தான் தமிழினத் தீர்வே அடங்கிக் கிடக்கிறது. இத்தனைப் போராட்டத்திற்கும், இத்தனை இழப்புக்கும் பின்னரும் நாம் இந்த நிலையினின்று ஓரளவு இறங்கி வந்தாலும், இந்த இனத்திற்குற்ற இழிவையும், இழப்பையும் என்றைக்குமே மீட்டுக்கொள்ள முடியாது. **என்றென்றைக்கும் நாம் அடிமைகள்தாம் என்பதை உலகெங்கும் உள்ள தமிழர் வாழும் நாடுகளிளெல்லாம் நாம் எழுதி வைத்துக்கொள்ள வேண்டியதுதான். அப்படிப்பட்ட ஓர் இழிவான வாழ்வு நேர்வதைவிட, ஒட்டுமொத்தமாக நாம் அனைவரும் அழிந்துபோவதே நல்லது!**

ஒரு திருத்தம்!

சென்ற **'தமிழ்நிலம்'** இதழ் எண் : 73 - இல், 5 ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்த, 'பாவலரேறு அவர்களின் சுற்றுச்செலவு' நிகழ்ச்சி விளக்கத்தின் முகப்பில், வெளியாகியிருந்த, 'மொத்த உரை நேரம் 35 மணி' என்பதை' **59 மணி** என்றும், கலந்துரையாடல் நேரம் 20 15 என்பதை 16 **மணி** என்றும் திருத்திக்கொள்க.

— **அமைச்சர்.**

த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 74 TN. MS. (C) 657

அனுப்புதல் :
தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தொலைபேசி எண் : 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. 1 திருவாட்டி

... ஆசிரியர் : தென்மொழி நா. இளமாறன்.